உயர் கல்வி (இ1)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை-9

கடிதம் எண். E 3058644 / இ1 /2022-1, நாள். 29.09.2022

அனுப்புநர்

முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள்
(அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு நிகர்நிலை பல்கலைக்கழகம் தவிர்த்து)

ஐயா / அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வி- சுயநிதி கல்லூரிகள் - மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பி.எச்டி. முடித்த மாற்றுத் திறனாளிகளுக்கு (பார்வையற்றவர்கள்) தற்காலிக விரிவுரையாளர் பணி வழங்கிட கோருதல் - தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 107, உயர்கல்வி (இ1)த் துறை, நாள். 14.05.2015
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 34672/ஆர்1/2022, நாள். 23.08.2022.

.........

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில், தங்கள் பல்கலைக்கழகங்களில் இணைவு பெறுகின்ற அரசு / உதவிபெறும் / தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களில் 3 %-ஐ மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு நிரப்பிட வேண்டும் என்பதையும், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளை கொண்டு நிரப்பப்படும் உதவி பேராசிரியர் பணியிடத்திற்கு 25% சம்பள மானியம் வழங்கப்படும் என்பதையும் இணைவு பெறுவதற்கான விதிமுறைகளில் சேர்க்குமாறு ஆணையிடப்பட்டது.

3. மேற்கூறிய அரசாணையின்படி, அனைத்து தனியார் சுயநிதி கல்லூரிகளில் இணைவு பெறும்போது விதிமுறைகள் சேர்க்கப்பட்டனவா, மேலும் இணைவு பெற்ற தனியார் சுயநிதி கல்லூரிகளில் அவ்விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்ற விவர அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

29/09/2022

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website:

**No.TNTEU/R/QA/2022/ 04526** **Date: 09.12.2022**

சுற்றறிக்கை

**Dr.M.Soundararajan, Ph.D.,**
**Registrar i/c**

பெறுநர்:

முதல்வர்கள் /செயலர்கள்
அனைத்து இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் - இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - கல்லூரிக் கல்வி சுயநிதி கல்லூரிகள் - மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பி.எச்.டி முடித்த மாற்றுத் திறனாளிகளுக்கு (பார்வையற்றவர்கள்) தற்காலிக விரிவுரையாளர் பணி வழங்கிட சமர்ப்பிக்ககோருதல் - தொடர்பாக.

பார்வை: 1.கடிதம் எண் E3058644/இ1/2022-1, நாள் 29.09.2022
2.அரசாணை (நிலை) எண்.107 உயர்கல்வி (இ1)த்துறை நாள். 14.05.2015
3.கல்லூரி கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.34672/ஆர்/2022 நாள்.23.08.2022

*****

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் அனைத்தும் பார்வை-2 கானும் அரசாணையின்படி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் வெளியிடப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் தங்கள் பல்கலைக்கழங்களில் இணைவு பெறுகின்ற அரசு உதவி பெறும் தனியார் சுயநிதி கலை மற்றம் அறிவியியல் கல்லூரிகளில், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களில் 3% ஐ மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு நிரப்பிட வேண்டும் என்பதையும், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளை கொண்டு நிரப்பப்படும் உதவி பேராசிரியர் பணியிடத்திற்கு 25% சம்பள மானியம் வழங்கப்படும் என்பதையும் இணைவு பெறுவதற்கான விதிமுறைகளில் சேர்க்குமாறு ஆணையிடப்பட்டது.

மேற்கூறிய அரசாணையின்படி, அனைத்து இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளும் விவர அறிக்கையினை உடனடியாக பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பதிவாளர் (பொ)

இணைப்பு: உயர்கல்வி(இ1)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை- கடிதம் எண் E3058644/இ1/2022-1, நாள் 29.09.2022